# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:125 **தேதி**:-31.08.2016

**ஊதிய பேச்சு வார்த்தையும் இதர செய்திகளும்…**

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் 30.08.2016 அன்று BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை சந்தித்து ஊழியர்களுக்கான அடுத்த ஊதிய மாற்றத்திற்கான பேச்சுவார்த்தை துவங்குவதை அசாதரணமாக தாமதம் செய்வதற்கு தங்களின் அதிருப்தியினை தெரிவித்தனர். ஊதிய மாற்றத்திற்கான இணைந்த குழுவை உடனடியாக அமைத்து ஊதிய மாற்றத்திற்கான பூர்வாங்க பேச்சு வார்த்தையை துவங்க வேண்டும் என அவர்கள் நிர்வாகத்தை கேட்டுக் கொண்டனர். இந்த பிரச்சனையில் அக்கறையுடன் தலையிடுவதாக BSNL CMD தெரிவித்துள்ளார். மேலும் 19.08.2016 அன்று மேற்கு வங்க BSNL ஊழியர் சங்க அலுவலகத்தின் மீது நடைபெற்ற தாக்குதல் தொடர்பாகவும் அவருடன் விவாதித்தனர். இந்த பிரச்சனையில் மேற்கு வங்க தலைமை பொது மேலாளரின் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் நிலைமையை மேலும் மோசமாக்குவதாக தெரிவித்தனர். இதில் தேவையான தலையீட்டை செய்வதாக BSNL CMD உறுதி அளித்துள்ளார்.

**மாநிலங்களுக்கு இடையேயான தற்காலிக மாற்றல்**:- மாநிலங்களுக்கு இடையேயான தற்காலிக மாற்றலில் கார்ப்பரேட் அலுவலகத்தின் ஒப்புதல் தேவைப்படுகின்றது. அதிகப்படியான விண்ணப்பங்கள் வருவதால் அவற்றை முறைப்படுத்திட மாநில அலுவலகங்களில் இருந்து மாநிலத்தலைமையின் தெளிவான பரிந்துரையோடு மார்ச், ஜூன்,செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாத இறுதிக்குள் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். அவற்றை ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மற்றும் ஜனவரி மாதங்களில் கார்ப்பரேட் அலுவலகம் பரிசீலிக்கும் என கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**JTO LICE தேர்விற்கான கல்வி தகுதி**:- JTO LICE 2014தேர்வு விதிகளில் உள்ள கல்வி தகுதிகளுடன் MSc(Electronics) மற்றும் MSc(Computer Science) ஆகியவற்றையும் இணைத்து கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு வெளியிட்டுள்ளது.

**JTO LICE தேர்வை தள்ளி வைத்தது சரியல்ல**:- 28.08.2016 அன்று நடைபெற இருந்த JTO LICE தேர்வினை கார்ப்பரேட் அலுவலகம் 26.08.2016 அன்று வெளியிட்ட உத்தரவின் படி 24.09.2016க்கு தள்ளி வைத்துள்ளது. தேர்வு எழுத இரண்டு நாட்கள் மட்டுமே உள்ள சமயத்தில் இந்த தேர்வை தள்ளி வைத்தது BSNL நிர்வாகத்தின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை கேள்விக்குரியதாக்கி உள்ளது. இது தொடர்பாக BSNL ஊழியர் சங்கம் Director(HR) அவர்களுக்கு தங்களின் அதிருப்தியை தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளதோடு, இந்த தேர்வை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**